# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.8 (L.W.12)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Arunachalam @ Arun | Caste | : | SC |
| Father's Name | : | S.Mani | Calling | : | Driver |
| Village | : | Mottapalli | Religion | : | |
| Taluk | : | Palamaner | Age | : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.01.2025.

(A1 to A6 present)

**முதல் விசாரணை**

நான் மோட்லப்பள்ளி கிராமம், சப்பிடப்பள்ளி அஞ்சல், பைரெட்டிபள்ளி மண்டலம், பலமனேரி தாலுக்கா, சித்தூர் மாவட்டத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. 10 வருடம் ஆகிவிட்டது. நான் B.A., II-year discontinue செய்துவிட்டேன். ஆந்திரா மாநிலம் மாவட்ட போக்குவரத்து துறையில் என் தகப்பனார் ஓட்டுனராக பணிசெய்து வந்து தற்போது அலுவலகத்தின் உள்ளேயே பணி செய்து வருகிறார்.

நான், வினோத்குமார், ராஜ்குமார், சுதாகர், பிரேம்குமார் ஆகியோர்கள் நண்பர்கள் ஆவோம். பிரேம்குமார் வெளியே போகலாம் வாங்க என்று 2015ம் வருடம் என்னை கூப்பிட்டார். மாதம் 8ம் மாதம் இருக்கும். ஆனால் சரியாக நினைவில்லை. பிரேம்குமார் மற்றும் நண்பர்கள் அழைத்ததின்பேரில் நானும், அவரும் சேர்ந்து

பேர்ணாம்பட்டு வழியாக பள்ளிகொண்டா வந்தோம். மாலை 5, 5.30 மணியளவில் அவர் என்னை அழைக்க, நான் கிளம்பி மறுநாள் அதிகாலை 6, 6.30 மணியளவில் பள்ளிகொண்டாவிற்கு பொலிரோ காரில் வந்து சேர்ந்தோம். அந்த பொலிரோ கார் பிரேம்குமாருக்கு பாத்தியப்பட்டது. நான், வினோத்குமார், ராஜ்குமார், சுதாகர், பிரேம்குமார் ஆகிய ஐவரும் ஒன்று சேர்ந்து வந்தோம்.

நாங்கள் பள்ளிகொண்டா ஆற்று அருகே காலைகடன் கழிக்க நின்று இருந்தோம். நான் வண்டியில் இருந்தேன். மற்ற நால்வரும் ஒதுக்கு புறமாக சென்றார்கள். அப்போது போலிசார் அங்கு வரவே என்னுடன் இருந்த 4 நண்பர்களும் ஓடிவிட்டார்கள். என்னை போலிசார் பிடித்துக் கொண்டார்கள். என்னை போலிசார் பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். நாங்கள் வந்த பொலிரோ வண்டியை போலிசார் காவல் நிலையத்திற்கு எடுத்து வந்தார்கள்.

நான் பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு வந்தபோது அந்த காவல் நிலையத்தில் இரண்டு ஆண் பொது ஜனங்கள் அங்கிருந்தார்கள். அந்த இரண்டு நபர்களும் காவல் நிலையத்தில் ஓரமாக உட்கார்ந்து இருந்தார்கள். அதில் ஒருவர் லுங்கி கட்டியிருந்தார். மேல்சட்டை போட்டிருந்தார். மற்றொருவர் பேண்ட், சட்டை போட்டு இருந்தார். லுங்கி அணிந்திருந்தவர் சுமார் 45 வயதுக்கு மேல் இருந்தரர். அவர் அடிக்கடி காவல் நிலையத்திற்கு வெளியே சென்று புகைபிடித்து வந்தார். மற்றவர் பேண்ட் மற்றும் சர்ட் போட்ட

நபருக்கு சுமார் 30 வயதிருக்கும். அந்த இரு நபர்களும் சாதாரண உடல்வாகு கொண்டவர்களாக இருந்தார்கள்.

என்னுடைய 4 நண்பர்கள் ஓடிவிட்டதால் அவர்களை பிடிப்பதற்காக அன்று இரவு போலிசார் என்னை டாடா சுமோவில் அழைத்து சென்றார். எனக்கு பக்கத்து ஊரான பலமனேரியில் என்னுடைய நண்பர் சிவாவை நான் போலிசிடம் அடையாளம் காட்டினேன். அவர் ஏற்கனவே என் ஊரில் அறிமுகம் ஆகி என்னுடன் வெளியே போக வர இருப்பார்.

பின்னர் நானும், சிவாவும் சேர்ந்து போலிசாருடன் அன்று விடியற்காலையில் பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு வந்துவிட்டோம். காவல் நிலையத்தில் இருந்த ஒரு வயது முதிர்ந்த போலிஸ்காரர் என் தந்தையாருக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விசாரித்தபோது, என் அப்பா அவர் மகன் என்று என்னை கூறினார்.

உடனே என் தந்தையாரும், தாயாரும் குடியாத்தம் வட்டம், மேல்பட்டி அருகே உள்ள கார்கூர் என்ற கிராமத்தில் உள்ள என்னுடைய உறவினரான வினோத்குமார் அழைத்துக்கொண்டு பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு வந்து, போலிசாருடன் பேசி என்னை அழைத்து சென்றார்கள். என்னை போலிசார் விசாரணைக்கு பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் லாக்கப்பில் வைத்திருந்தார்கள். எனக்கு உணவு கொடுத்தார்கள்.

அங்கிருந்த போலிசார் என்னை லத்தியால் எனது உள்ளங்கையில் இரண்டு அடி அடித்தார்கள். உண்மை சொல்லவில்லை என்று என்னை லத்தியால் கையில் அடித்தார்கள். போலிசார் என்னை மிரட்டினார்கள். வேறு எந்த நபர்களையும் போலிசார் நான் இருந்த சமயம் அடிக்கவில்லை.

வழக்கு கோப்பில் உள்ள பட்டியல் ஆவண எண்.65 ஐ சாட்சியிடம் காட்டி அதில் சாட்சியின் கையொப்பம் 8 தாள்களில் உள்ளது என்றும், அந்த கையெழுத்துக்கு மேலே ஆண் நபர்களின் தனித்தனி போட்டோக்களின் ஒளி நகலில் உள்ளது என்றும், காட்டி வினவியபோது சாட்சி அந்த 8 தாள்களில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்று ஒப்புக்கொள்கிறார். அதில் கையொப்பம் போடும்போது அதில் ஒளிநகல் போட்டோக்கள் இல்லை என்று சொல்கிறார். எனவே அவரது கையொப்பங்கள் அ.சா.ஆ.9 வரிசையாக குறியிடப்படுகிறது. CBCID போலிசார் என்னை விசாரித்தபோது நான் கையொப்பம் போட்டேன். மேற்படி போலிசார் என்னை என் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். போலிசார் என்னை ஒருமுறை விசாரித்தார்கள்.

சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

கு.வி. அரசு தரப்பில்

போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றாலும் அந்த போலீஸ் விசாரணையில், என்னை போலிசார் பள்ளிகொண்டா

ஆற்றிலிருந்து என்னை, பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றபோது காலை 9 மணிக்கு அந்த காவல் நிலையத்தில் 2 பொது ஜனங்கள் இருந்தார்கள் என்று சொல்லி உள்ளேன் நான் கையொப்பம் போட்டுள்ள அ.சா.ஆ.9 வரிசையில் உள்ள ஒரு ஒளிநகல் போட்டோவில் 7 வது தாளில் உள்ள நபர் அந்த காவல் நிலையத்தில் அன்று இருந்தாரா என்றால் சாட்சி அந்த 2 நபர்களில் ஒரு நபராக அந்த ஒளிநகல் போட்டோவில் இருந்த நபர் இருக்கலாம் என்றும், மேலும் சற்று யோசித்து அவர் இருந்து இருக்கலாம் என்று கூறுகிறார்.

பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் என்னை லீடிங் செயின் போட்டு கட்டி வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய பேண்ட் பெல்ட்டை எடுத்து என்னுடைய இரு கைகளையும் பின்னால் கட்டி பள்ளிகொண்டா ஆற்றங்கரையில் இருந்து காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள். பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் எந்த லீடிங் செயினும் போட்டு என்னை கட்டி வைக்கவில்லை.

சாட்சியிடம் வழக்கு கோப்பில் உள்ள பட்டியல் ஆவண எண்.65 ஆவணத்தில் சாட்சியின் கையொப்பம் உள்ள ஒளிநகல் போட்டோக்களில் 8 வது தாளில் உள்ள புகைப்பட மனித போட்டோவை காட்டி அந்த நபர் தான் தன்னை அடித்ததாக CBCID போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளதாகவும், அவர்தான் அடித்தாரா என்று கேட்டபோது சாட்சி இல்லை என்றார்.

1 முதல் 6 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான நிலையில் சாட்சியை எதிரிகளுக்கு அருகில் அனுப்பி எந்த எதிரி, தன்னை அடித்தார் என்று பார்த்த சொல்ல நீதிமன்றத்தை அரசு வழக்கறிஞர் கேட்ட நிலையில் அனுமதிக்கப்பட்டது. சாட்சி 6 எதிரிகளை பார்த்தபிறகுயாரும் அடிக்கவில்லை என்று கூறுகிறார்.

பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் என்னை, 1ம் எதிரி மார்ட்டின் பிரேம்ராஜ் அடித்தார் என்றும், அவ்வாறு CBCID போலிசாரிடம் சொல்லிவிட்டு தற்போது மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னை அடித்த காவல் அதிகாரி தான் அ.சா.ஆ.9 வரிசையில் உள்ள 7வது தாளில் கண்ட ஆண் நபரை பிரம்பால் அடித்தார் என்றால் சரிதான். அந்த 7வது தாள் அ.சா.ஆ.10 ஆக குறியிடப்படுகிறது.

அந்த நபரை, என்னை அடித்த போலிஸ் அதிகாரி ஷமில் பாஷா என்று அழைத்தார் என்றால் பேர் வைத்து அழைத்தாரா என்று ஞாபகம் இல்லை. போலிசார் அந்த நபரை ஷமில் பாஷா என்று அழைத்தார் என்றும் அதை நான் என் காதுபட கேட்டேன் என்றும், அவ்வாறே CBCID போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும், தற்போது தயங்கி, தயங்கி நான் ஞாபகம் இல்லை என்று இழுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல.

அதன்பின்னர் அந்த ஒளிநகல் போட்டோவில் உள்ள நபரை போலிசார் அன்று மாலை காவல் நிலையத்திலிருந்து வெளியே அழைத்து சென்றார்கள். அதை நான் பார்த்தேன். அன்று இரவு 8 மணிக்கு என்னை 2 போலிசார் சுமார் அரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள போலிஸ் குவார்ட்டர்ஸ்க்கு அழைத்து சென்றார்கள் என்றால்

வேறு எங்கும் அழைத்து செல்லவில்லை. போலிசார் மறுநாள் என்னையும், என் நண்பர் சிவாவையும் ஆந்திராவில் இருந்து டாட்டா சுமோ மூலம் பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு அழைத்து செல்வதற்கு முன்பு அதற்கு அருகில் இருந்த ஒரு அறைக்கு அழைத்து சென்றார்கள் அது அறை மாதிரி தெரியவில்லை. போலிஸ் ஸ்டேசன் மாதிரி தெரிந்தது. அந்த இடத்தில் 4, 5 போலிசார் இருந்தார்கள்.

நானும், சிவாவும் மேற்படி காவல் நிலையம் போன்ற அறையில் இருந்தபோது அ.சா.ஆ.9 வரிசையில் கண்ட 7 வது தாளில் உள்ள ஒளிநகல் படத்தில் உள்ள ஆண் நபர் அந்த அறையில் இருந்தார். அவர் அங்கிருந்த தரையில் அமர்ந்துக் கொண்டு இருந்தார். ஆனால் பார்ப்பதற்கு சோகமாக இருந்தார். அவர் கை, கால்களில் வீக்கம் இருந்தது என்றால் அதை நான் பார்க்கவில்லை.

எனக்கும், சிவாவுக்கும் அங்கு வைத்து இரவு உணவு கொடுத்தார்கள். அங்கு தரையில் உட்கார்ந்த நபருக்கும் போலிசார் சாப்பாடு கொடுத்தார்கள். அவர் ஒரு மாதிரியாக சாப்பிட்டார். அந்த நபருக்கு, என் நண்பர் சிவா தான் சாப்பாடு பொட்டலத்தை பிரித்துக் கொடுத்தார். அங்கு பெரிய அதிகாரி இருந்தார். அவர் தான் என் தந்தையாருக்கு போன் செய்தார். 4, 5 போலிசார் அங்கிருந்தார்கள்.

அ.சா.ஆ.9 வரிசையில் கண்ட 8 தாள்களில், 8 வது தாளில் உள்ள ஒளிநகல் புகைப்படத்தில் உள்ள அதிகாரி தான் என் தந்தையாருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். 8 வது தாள் அ.சா.ஆ.11 ஆக குறியிடப்படுகிறது.

மேற்படி அந்த அதிகாரி, என் தந்தையாருக்கு போன் செய்த போது நானும், என் நண்பர் சிவாவும், போலிஸ் அதிகாரிகளும், மற்ற நபரும் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் இல்லை. பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு வெளியே காவல் நிலையம் போன்ற அறையில் இருந்தோம்.

மேற்படி இடத்திற்கும், பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கும் இடையே ஒரு கிலோ மீட்டர் தூரம் இருக்கும். என்னை மேற்படி நாங்கள் இருந்த அறையிலிருந்து என் தந்தையார் போலிசாரிடம் எழுதிக்ககொடுத்துவிட்டு என்னை வீட்டிற்கு அழைத்து சென்றார். அப்போது என் தந்தையார் எழுதிக்கொடுத்த ஆவணத்தில் உள்ள கையெழுத்து என் தந்தையார் உடையது தான். அந்த ஆவணம் பட்டியல் எண்.50 ஆகும்.

என் தந்தையாருடன், என் பெரியம்மா மகன் வினோத்குமார் மற்றும் அவருடைய நண்பர் ஆகிய மூவரும் வந்தார்கள். அதில் வினோத்குமாரும், அவருடைய நண்பரும் கையெழுத்து போட்டார்கள். நான் ஆந்திரா மாநிலம், மதனப்பள்ளி திருட்டு வழக்கு சம்மந்தமாக சில காலம் ஜெயிலில் இருந்தேன். பிறகு அந்த வழக்கில் நான் விடுதலையானேன்.

நான் மதனப்பள்ளி சிறைச்சாலையில் இருந்தபோது அப்போது வேலூர் மாவட்டம், வாணியம்பாடியை சேர்ந்த ஒரு நபர் நான் இருந்த சிறையில் இரு்ந்தார் என்றால் அவ்வாறு இல்லை. அந்த வாணியம்பாடி நபரிடம் என்னை பள்ளிகொண்டா போலிசார் காவல் நிலையத்தில்

வைத்திருந்த விஷயத்தை சொன்னேன் என்றால் அவரிடம் சொல்லவில்லை. எனக்கு தெரிந்த நண்பர்களிடம் சொன்னேன். என் நண்பர்கள் சிறைச்சாலையில் இருந்தார்கள். அவர்களிடம் சொன்னேன்.

மேற்படி அ.சா.ஆ.10 ல் உள்ள நபர் இறந்துவிட்டார் என்பது நான் சிறைச்சாலையில் இருந்து விடுதலையான பிறகு தெரிந்துக் கொண்டேன். அ.சா.ஆ.10 ல் கண்ட நபரை ஆஜர் எதிரிகள் தான் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் பிரம்பால் அடித்தார்கள் என்றும், பின்னிட்டு காவல் நிலையத்திற்கு சற்று வெளியே இருந்த ஒரு அறையில் கை, கால் தலைகீழாக தொங்கவிட்டு அடித்ததை நான் பார்த்தேன் என்றும், அதை CBCID போலிசாரிடம் சொல்லிட்டு தற்போது பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் காவல்துறை அதிகாரிகள் என்பதால் அவர்களுக்கு எதிராக சாட்சியம் அளித்தால் என்னை வேறு ஒரு வழக்கில் சிக்க வைத்துவிடுவார்கள் என்று பயந்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.மகேந்திரன் வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

2 முதல் 5 எதிரிகள் தரப்பில் கு.வி.

திரு.ரவி வழக்கறிஞரின், இளவர் வழக்கறிஞர் திரு.திலிப் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.06 18:24:06 +0530

## Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.

S.C.No.138 of 2017

Prosecution Witness No.P.W.9 (L.W.13)

| | | | |
|---|---|---|---|
| Name | : Siva @ Sivasankar | Caste | : B.C. (A) |
| Father's Name | : V.Srinivasalu | Calling | : Labar |
| Village | : Pathikonda | Religion | : |
| Taluk | : Palamaner | Age | : 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.01.2025.

(A1 to A6 present)

மேற்படி சாட்சியின் தாய்மொழி தெலுங்கு என்றும், தன்னால் தமிழ், எழுத, படிக்க, பேச தெரியாது என்றும் சொன்னார். ஏற்கனவே CMP.No.35 of 2025 dated 03/01/2025 ன்படி வழக்கில் கண்ட சாட்சிகளை விசாரிக்க மொழிப்பெயர்பாளர் கொண்டு விசாரிக்கவேண்டும் என்று ஏற்கனவே சொன்ன நிலையில் அரசு தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு, அது உத்தரவாகி, அதன் அடிப்படையில் அரசு மேல்நிலைப்பள்ளி, சேர்காடில் உள்ள தெலுங்கு மொழி ஆசிரியர் வி.அமரேந்திரன் அவர்கள் இந்த வழக்கில் தெலுங்கு சாட்சியிடம் மொழி பெயர்க்கும்படி கூறியதின் பேரில் அவர் இன்று ஆஜரானார். அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியிடம் கேட்கும் கேள்விகளை கேட்டு, சாட்சி சொல்லும் பதில்களை கேட்டு, அவர் சொல்லி கீழ்க்கண்டவாறு பதியப்படுகிறது.

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு.மகேந்திரவர்மன் அவர்களுக்கு தெலுங்கு மொழியில் ஓரளவுக்கு தெரியும் என்பதையும் பதியப்படுகிறது.

முதல் விசாரணை

நான் மேற்படி விலாசத்தில் வசிக்கிறேன். நான் ஐ.டி.ஐ. படித்துள்ளேன். நான் விவசாயம் செய்கிறேன். எனக்கு திருமணம்

ஆகிவிட்டது. எனக்கு 2 குழந்தைகள் உள்ளனர். அ.சா.8 அருணாச்சலம் 10 ஆண்டுகளுக்கு முன்பு நண்பர். தற்போது தொடர்பை முறித்துவிட்டேன். என் மனைவி பத்திகொண்டா சித்தூர் மாவட்டத்தில் உள்ளார்.

எனக்கு 21.05.2015 ல் திருமணம் ஆனது. கல்யாணத்தின்போது என் மனைவி பெங்கரகுண்டா, சித்தூர் மாவட்டம் என்ற இடத்தில் என் தாய் மாமன் வீட்டில் இருந்தார். என் தாய் மாமன் பெயர் கே.முனிராஜிலு. எனக்கும், என் மனைவிக்கும் காதல் திருமணம். எனக்கும், என் மனைவிக்கும் ஜாதி மாறி திருமணம் நடந்தது. என் மனைவியின் பெற்றோர் வீட்டில் திருமணத்திற்கு ஒப்புக்கொள்ளவில்லை. அதனால் தான் என் தாய் மாமன் வீட்டில் இருந்தேன். நானும், என் மனைவியும் ஒன்றாக வாழ்ந்து வருகிறோம். நானும், அ.சா.8 அருணாச்சலமும் வெவ்வேறு சாதியை சேர்ந்தவர்கள்.

ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை, எனக்கு திருமணம் ஆன ஒரு மாதம் கழித்து பார்த்தேன். பிரேம்குமார், வினோத்குமார், அருணாச்சலம், சுதாகர் ஆகியோர் என்னுடைய நண்பர்கள். அப்போது அருணாச்சலம் படித்துக் கொண்டு இருந்தார். மற்ற 3 நபர்கள் வேலையில்லாமல் வெட்டியாக ஊரை சுற்றிக்கொண்டு திருட்டு வழக்கில் சம்மந்தப்பட்டு இருந்தார்கள். அந்த நேரத்தில் என் மீது எந்த குற்ற வழக்கும் இல்லை. எனக்கு எதிராக எந்தஒரு குற்ற வழக்கும் இதுவரை இல்லை.

15 அல்லது 16 தேதிகளில், 6 ம் மாதம், 2015 வருடம் 4 தமிழ்நாடு போலிசும் மற்றும் அ.சா.8 அருணாச்சலமும் அதிகாலை 4 மணிக்கு என் வீட்டிற்கு வந்தார்கள். மேற்படி போலிஸ் அதிகாரிகள் சீருடையில் இருந்தார்களா என்றால் எனக்கு எந்த ஒரு ஐடியாவும் இல்லை. மேற்படி 4 போலிஸ் அதிகாரிகளும், அ.சா.8 ம் என் தாய்மாமன் முனிராஜிலு வீடான பெங்கரகுண்டா வீட்டிற்கு வந்தார்கள்.

அந்த நேரத்தில் எனக்கும், என் மனைவிக்கும் திருமணம் ஆகியதில் பிரச்சனை இருந்ததால் நாங்கள் என் தாய் மாமன் வீட்டில் இருந்தோம். போலிசார் என்னை விசாரிக்கவேண்டும் என்று சொல்லி, ஆந்திராவில் இருந்து தமிழ்நாடு வேலூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிகொண்டாவிற்கு டாடா சுமோ வாகனத்தில் அழைத்து வந்தார்கள்.

அ.சா.8 அருணாச்சலம் என்னுடன் வந்தார். குடியாத்தம் வழியாக பள்ளிகொண்டாவிற்கு வந்தோம். பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. போலிஸ் குவார்ட்டர்ஸ்க்கு அழைத்து சென்றார்கள். என்னுடன் அருணாச்சலமும் வந்தார். 4 போலிசாரும், நானும், அருணாச்சலமும் போலிஸ் குவாட்டர்ஸ்க்கு சென்றோம். காலை 9, 9.30 மணிக்கு அந்த போலிஸ் குவாட்டர்ஸ்க்கு நானும், 4 போலிசாரும், அருணாச்சலமும் சென்றோம்.

அந்த போலிஸ் குவாட்டர்சில் வேறு ஒரு எதிரி இருந்தார். அதை தவிர 2 போலிசார் இருந்தார்கள். அங்கு நாங்கள் 6 பேர் சென்றோம். என்னை அழைத்து சென்ற 4 போலிசாரும் மற்றும் அந்த போலிஸ் குவாட்டர்சில் இருந்த 2 போலிசாரும் சேர்ந்து 6 நபர்கள் இந்த வழக்கில் உள்ள எதிரிகளா என்று சாட்சியிடம் பார்த்து சொல்லும்படி கேட்டதில்

சாட்சி இவ்வழக்கில் உள்ள எதிரிகளை பார்த்து இந்த எதிரிகள் தான் அந்த 6 நபர்கள் என்று சொன்னார். பட்டியல் ஆவண எண்.66 ல் 8 தாள்களில் சாட்சியின் கையொப்பம் உள்ளது என்று சொல்லி வினவியபோது, சாட்சி ஒப்புக்கொள்வதால் அந்த ஆவணத்தில் கண்ட சாட்சியின் கையொப்பம் அ.சா.ஆ.12 வரிசையாக குறியிடப்படுகிறது.

அந்த கையொப்பம் உள்ள ஆவணத்தில் 7 வது தாளில் உள்ள ஒளிநகல் போட்டோ ஆவணத்தில் உள்ள நபர் தான் நாங்கள் போலிஸ் குவாட்டர்சில் இருந்தபோது அங்கிருந்த எதிரியாவார். அந்த 7 வது தாள் ஒளிநகல் போட்டோ ஆவணம் அ.சா.ஆ.13 ஆகும். அ.சா.ஆ.10 ல் உள்ள போட்டோவும், அ.சா.ஆ.13 ல் உள்ள போட்டோவும் ஒரே நபர் தான்.

அந்த பட்டியல் ஆவண எண்.66 ல் உள்ள முதல் தாளில் உள்ள ஒளிநகல் போட்டோவில் உள்ள நபர் சுரேஷ் ஆவார். அவர் இந்த வழக்கில் கண்ட 6 ம் எதிரியாவார்.

அதே ஆவணத்தில் 2 ம் தாளில் உள்ள ஒளிநகல் போட்டோவில் உள்ள நபர் பெயர் தெரியவில்லை. அவர் என்னுடைய தாய் மாமன் வீட்டிற்கு வந்த போலிஸ்காரர்களில் உள்ள ஒரு நபர். அவர் இந்த வழக்கில் 2 ம் எதிரியாவார்.

அதே ஆவணத்தில் 3 ம் தாளில் உள்ள நபரை சாட்சி பார்த்து நாங்கள் பள்ளிகொண்டா போலிஸ் குவார்ட்டர்ஸ் சென்றபோது அங்கிருந்த நபர் ஆவார். அந்த நபர் இந்த வழக்கில் உள்ள 3 ம் எதிரி என்று சாட்சி அடையாளம் காட்டினார்.

அதே ஆவணத்தில் 4ம் தாளில் உள்ள நபர் வழக்கில் கண்ட எதிரியாவார். அவர் போலிஸ் குவார்ட்டர்சில் இருந்த போலிசார் ஆவார். அவர் இந்த வழக்கில் கண்ட 4ம் எதிரியான சபாரத்தினம் என்று சாட்சி அடையாளம் காட்டினார்.

அதே ஆவணத்தில் 5ம் தாளில் உள்ள நபர் போலிஸ் குவார்ட்டர்சில் இருந்த போலிசார் ஆவார். அவர் இந்த வழக்கில் ஆஜராகவில்லை. அவர் ஏற்கனவே இறந்துவிட்ட முனியன் (எ) கேசவன் ஆவார்.

அதே ஆவணத்தில் 6ம் தாளில் உள்ள நபரை சாட்சியிடம் காட்டி வினவியபோது, அவர் ஆந்திராவிற்கு வந்த போலிசார் என்றும் அவர் இந்த வழக்கில் கண்ட 6ம் எதிரி என்றும், சாட்சி பார்த்து அடையாளம் காட்டினார்.

அதே ஆவணத்தில் 8ம் தாளில் உள்ள நபரை சாட்சியிடம் காட்டி வினவியபோது, அவர் ஆந்திராவிற்கு வந்த போலிசார் என்றும் அவர் இந்த வழக்கில் கண்ட 1ம் எதிரி மார்ட்டின் பிரேம்ராஜ் என்றும், சாட்சி பார்த்து அடையாளம் காட்டினார். மேற்படி பட்டியல் ஆவண எண்.66ல் கண்ட ஒளிநகல் கோப்பு ஆவணத்தையும், ஒளிநகல் புகைப்படத்தையும் சாட்சி ஒப்புக்கொண்ட நிலையில் மேற்படி ஆவணம் அ.சா.ஆ.14 ஆக குறியிடப்படுகிறது. அ.சா.ஆ.14ல் கண்ட 8 நபர்கள் தான் பட்டியல் ஆவண எண்.65ல் உள்ள நபர்கள் தான்.

போலிஸ் குவார்ட்டர்சில் எனக்கும், என் நண்பர் அருணாச்சலத்திற்கும் போலிஸார் உணவு கொடுத்தார்கள். அந்த குவார்ட்டர்சில் ஒரு எதிரிக்கு உணவு கொடுத்தார்கள். அவர்

சாப்பிடவில்லை. அந்த எதிரிக்கு, அருணாச்சலம் உணவை ஊட்டிவிட்டார். என்னையும், அருணாச்சலத்தையும் போலிசார் வண்டி பிரச்சனை சம்மந்தமாக அழைத்து வந்தார்கள். அந்த எதிரிக்கும்., எங்களுக்கும் சம்மந்தம் இல்லை. போலிசார் எங்களை காரில் வந்த 4 நபர்கள் எங்கே என்று கேட்டார்கள். மற்றும் வேறு ஒரு காரை பற்றி விசாரித்தார்கள்.

மேற்படி ஓடிப்போன 4 நண்பர்களை சிசிடிவி கேமரா மூலம் போலிசார் கண்டுபிடித்து அவர்களை கைது செய்து, சித்தூர் மாவட்டம் கங்காவரம் காவல் நிலையத்தில் வைத்திருப்பதாக எனக்கு தகவல் கிடைக்க போலிசாரிடம் நான் சொன்னேன். போலிஸ் குவார்ட்டர்சில் என்னை போலிசார் என் தலை முடியை பிடித்து, என் கன்னத்தில் அறைந்தார்கள்.

அந்த போலிஸ் குவார்ட்டர்சில் இருந்த ஒரு எதிரியை போலிசார் அடித்தததை நான் பார்க்கவில்லை. ஆனால் அந்த நபருக்கு முதுகில் அடித்ததற்கான கருப்பு கலரில் காயம் இருந்தது. என்னை அடித்த போலிசார் இந்த வழக்கில் ஆஜரான 6ம் எதிரி சுரேஷ் ஆவார். அந்த போலிஸ் குவார்ட்டர்சில் இருந்த எதிரிக்கு 2 கைகளிலும் வீக்கமான காயங்கள் போல் கருப்பு கலரில் காணப்பட்டன.

ஆஜர் எதிரிகளில் ஒரு போலிஸ் அதிகாரி என் மாமா முனிராஜிலுக்கு தகவல் கொடுத்து என் மாமாவை வரவழைத்தார்கள். போலிஸ் குவார்ட்டர்ஸ்க்கு என் மாமா முனிராஜிலு மற்றும் மற்றொரு உறவினராக சத்யாவும் பள்ளிகொண்டாவில் உள்ள போலிஸ்

குவார்ட்டர்ஸ்க்கு வந்து என்னை அழைத்து சென்றார்கள். அன்று இரவு 9 மணியளவில் வந்தார்கள். பிறகு எழுதி வாங்கிக்கொண்டு என்னை அனுப்பிவிட்டார்கள். காலை 9 மணி முதல் இரவு 9, 9.30 மணி வரை போலிஸ் குவார்ட்டர்சில் நான் இருந்தேன்.

மேற்படி அ்.சா.ஆ.10 ல் கண்ட எதிரி அந்த போலிஸ் குவார்ட்டர்சில் தான், நான் செல்லும்வரை இருந்தார். அந்த நபர் சக மனிதர் நடப்பது போல் நடக்க முடியாமல் இருந்தார். அவர் நல்ல நிலையில் இல்லாமல் இருந்தார். என் தாய் மாமன் முனிராஜிலு அவர் கையொப்பம் எனக்கு பரி்ச்சியம்.

பட்டியல் ஆவண எண்.49 ல் உள்ள கையொப்பத்தை சாட்சியிடம் காட்டி வினவியபோது அந்த கையொப்பம் என் தாய்மாமா முனிராஜிலு உடையது என்கிறார். எதற்காக என் தாய்மாமா முனிராஜிலு அதில் கையொப்பம் போட்டார் என்று எனக்கு தெரியாது.

பட்டியல் ஆவண எண்.49 ல், 2 வது தாளில் பின்பக்கம் உள்ள கையொப்பம் என்னுடையது. அதில் தேதியை நான் குறிப்பிடவில்லை. மேற்படி போலிஸ் குவார்ட்டர்சில் நான் இருந்தபோது என் கைப்பேசி, என் மனைவி கைப்பேசி, என் மாமன் கைப்பேசி இருந்தது அதை வாங்குவதற்காக நான் கையொப்பம் போட்டேன். மேற்படி அந்த பட்டியல் ஆவண எண்.49 ல், 2 வது தாள் அ.சா.ஆ.15 ஆகும்.

மேற்படி பள்ளிகொண்டாவிலிருந்து நான் வீட்டிற்கு சென்றபிறகு, சுமார் 4, 5 மாதம் கழித்து என் சொந்த ஊரான பத்திகொண்டாவில் இருந்தபோது CBCID போலிசார் வந்தார்கள். எனக்கு பேருந்து கட்டணம் கொடுத்து வேலூருக்கு விசாரணைக்கு

வரச்சொன்னார்கள். நான் வேலூருக்கு விசாரணைக்கு வந்தேன். போலிசார் என்னை விசாரிக்க நான் சொல்ல சொல்ல போலிசார் கணிப்பொறியில் தட்டச்சு செய்துக் கொண்டார்கள். தெலுங்கு தெரிந்த போலிசார் பிரகாஷ் தான் நான் தெலுங்கில் சொன்னதை தமிழில் தட்டச்சு செய்தார். நான் கொடுத்த வாக்குமூலத்தை படித்து காண்பித்தார்கள். நான் சொன்னபடி தான் தட்டச்சு செய்யப்பட்டிருந்ததால் சரியென்றேன்.

CBCID போலிசார் என்னை ஒருமுறை தான் விசாரித்தார்கள். போலிசார் என் வீட்டிற்கு தகவல் கொடுத்தபோது நான் வீட்டில் இல்லை. தகவல் தெரிந்து வந்தபோது என்னை விசாரித்தார்கள். அ.சா.ஆ.14 ல் நான் கையொப்பம் போட்டபோது போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிஸ் குவார்ட்டர்சில் இருந்த எதிரியின் பெயர் பாஷா என்று எனக்கு கேட்டது. அவருடைய முழுப்பெயர் எனக்கு தெரியாது. ஷமில் பாஷா என்று அழைத்தார்களா என்றால், பாஷா என்று தான் எனக்கு கேட்டது.

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.மகேந்திரன் வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

2 முதல் 5 எதிரிகள் தரப்பில் கு.வி.

திரு.ரவி வழக்கறிஞரின், இளவர் வழக்கறிஞர் திரு.திலிப் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.06 18:24:14 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.10 (L.W.14)

| | | | |
|---|---|---|---|
| Name | : Mani | Caste | : SC |
| Father's Name | : Subbaiah | Calling | : Driver |
| Village | : Motlapalli | Religion | : |
| Taluk | : Palamaner | Age | : 53 years |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.01.2025.

(A1 to A6 present)

முதல் விசாரணை

நான் மேற்படி விலாசத்தில் வசிக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. நான் ஆந்திரா போக்குவரத்து கழகத்தில் ஓட்டுனராக உள்ளேன். அ.சா.8 அருணாச்சலம் என்னுடைய சிறிய மகன். நான் தற்போது ஆந்திரா போக்குவரத்து கழகதக்தில் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன்.

18.06.2015 ம் தேதி இரவு 9 மணிக்கு பள்ளிகொண்டா உதவி ஆய்வாளர் எனக்கு போன் செய்தார். என் மகன் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் இருப்பதாகவும், அவரை அழைத்து செல்லும்படியும் சொன்னார். திருட்டு வழக்கில் என் மகன் சம்மந்தப்பட்டு இருப்பதாக என்னை அழைத்தார்கள். நான் அன்று இரவு 10.30 மணிக்கு பள்ளிகொண்டாவிற்கு வந்தேன்.

நான் வரும்போது நான் என் அண்ணன் மகன் வினோத்குமாரையும், வினோத்திற்கு தெரிந்த இன்னொரு பையனையும் அழைத்துக் கொண்டு பள்ளிகொண்டா வந்தேன். பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு வந்து, என் மகனை காட்டும்படி கேட்டேன். உதவி ஆய்வாளர் வரவேண்டும் என்று சொன்னார்கள். பாலம் அருகில் இருந்த பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு சென்றேன்.

என் மகனை அழைத்து செல்வதற்காக நான் சர்க்கிள் ஆய்வாளரிடம் கையெழுத்து செய்துவிட்டு, என் மகனை அழைத்து சென்றேன். அந்த ஆவணம் அ.சா.ஆ.16 ஆகும். என் மகனை அழைத்து செல்லும் எண்ணத்தில் இருந்ததால், அந்த இடத்தில் வேறு நபர்கள் இருந்தார்களா என்று நான் கவனிக்கவில்லை. என் மகனை அழைத்து செல்லும் எண்ணத்தில் இருந்ததால் என் மகன் வேறு ஏதாவது சொன்னானா என்று நான் கவனிக்கவில்லை. CBCID போலிசார் என்னை ஆந்திராவில் என் வீட்டில் வைத்து விசாரித்தார்கள்.

சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

கு.வி. அரசு தரப்பில்

போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றாலும் அந்த போலீஸ் விசாரணையில், 18.06.2015 ம் தேதியன்று மதியம் 2 மணிக்கு

பள்ளிகொண்டா காவல் ஆய்வாளர் என்று சொல்லி எனக்கு போன் வந்தது. அதில் என் மகன் திருட்டு வழக்கில் இருப்பதாகவும், உடனே என்னை வரச்சொன்னதின்பேரில் நான் ஆந்திராவில் இருந்து வந்தேன்.

அதன் அடிப்படையில் நானும், என் அண்ணன் மகன் வினோத்குமாரும், அவர் நண்பர் ராஜன்பாபுவும் பள்ளிகொண்டா போலிஸ் குவார்ட்டர்ஸ்க்கு வந்தோம் என்றால் காவல் நிலையம் சென்றோம். நாங்கள் இருந்தபோது, 1ம் எதிரி அங்கு வந்தார் என்றால் நான் பார்க்கவில்லை. போலிஸ் விசாரணையில் 1ம் எதிரி மார்ட்டின் பிரேம்ராஜிடம் தான், என் மகன் அருணாச்சலம் எங்கே என்று கேட்டேன் என்று சிபிசிஐடி போலிசாரிடம் சொல்லி உள்ளேன் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

போலிசார் என் மகனை ஒப்படைக்க கையெழுத்து போட்டுக்கொடுத்து, என் மகனை அழைத்து சென்றேன். நான் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் என் மகனை பற்றி விசாரித்தேன், அந்த இருந்த போலிசார் என் மகன் குற்ற வழக்கில் உள்ளதால் எழுதிக்கொடுத்து அழைத்து செல்லும்படி சொன்னார் என்றால் சரிதான்.

என் மகனை அழைத்து செல்லவேண்டும் என்ற சூழ்நிலையில் இருந்ததால் நான் சென்ற இடம் காவல் நிலையமா அல்லது போலிஸ் குவார்ட்டர்சா என்று என்னால் சரியாக சொல்ல இயலவில்லை என்றால் சரிதான்.

என் மகனை, நான் அழைத்து செல்ல வந்தபோது என் மகன் இருந்த இடத்தில் இன்னொரு பொது நபர் எதிரி இருந்தாரா என்றால் நான் பார்க்கவில்லை. அங்கு ஒரு பொது நபர் எதிரி இருந்தார் என்றும், அதை நான் பார்த்தேன் என்றும், பார்க்கவில்லை என்று பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஆந்திரா அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரிவதால் ஆஜர் எதிரிகள் காவல்துறையின் அதிகாரிகள் என்ற பணியில் உள்ளதால் எனது மகன அருணாச்சலத்தை ஏதாவது ஒரு குற்ற வழக்கில் சிக்க வைத்துவிடுவார்கள் என்று அச்சப்பட்டு, நான் உண்மைகளை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.மகேந்திரன் வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

2 முதல் 5 எதிரிகள் தரப்பில் கு.வி.

திரு.ரவி வழக்கறிஞரின், இளவர் வழக்கறிஞர் திரு.திலிப் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

PERUMALSAMY MURUGAN
Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.06 18:24:24 +0530